

திருவாரூரில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழு ஆய்வுக்கூட்டம், பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் நடைபெற்றது. சட்டமன்ற மற்றும், பொதுக்கணக்கு குழு உறுப்பினர்கள் அக்ரி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஈ.ஆர்.ஈஸ்வரன், துரை.சந்திரசேகரன், எஸ்.சேகர், எஸ்.எஸ்.பாலாஜி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை சார்புச் செயலாளர் ஜெ.பாலசீனிவாசன், பூண்டி.கே.கலைவாணன் மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி.பி.சுரேஷ்குமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

## தொடர் விடுமுறை

# 1,100 சிறப்பு பஸ்கள் இயக்கம்!



சென்னை, செப். 28 –

அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் கே.இளங்கோவன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: இன்று (28ந் தேதி) மீலாது நபி, (29ந் தேதி) சனிக்கிழமை, (அக்.1ம் தேதி) ஞாயிற்றுக்கிழமை, (அக்.2ம் தேதி) காந்தி ஜெயந்தி என 4 நாட்கள் தொடர்ச்சியாக விடுமுறை வருகிறது. இதற்கிடையில் வெள்ளிக்கிழமை விடுப்பு எடுக்கும் பட்சத்தில் ஐந்து நாட்கள் விடுமுறை கிடைப்பதால் பயணிகள் சொந்த ஊர்களுக்குச் சென்று வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு சென்னையில் இருந்து இன்று இயக்கக்கூடிய பஸ்களுடன் கூடுதலாக 250 பஸ்களும், நாளை (29ம் தேதி) 450 பஸ்களும் இயக்கப்படுகின்றன. இதேபோல, கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், பெங்களூரு போன்ற இடங்களிலிருந்து முக்கிய இடங்களுக்கும் 400 சிறப்பு பஸ்கள் என மொத்தம் 1,100 பஸ்கள் இயக்கப்பட இருக்கின்றன என்று போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளன.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அரியலூர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், தத்தனூர் மீனாட்சி ராமசாமி கல்லூரியில் மாபெரும் பேச்சுப் போட்டியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ. பெருநற்கிள்ளி, மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ்குமார், கல்லூரி தாளாளர் எம்.ஆர். ரகுநாதன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## "முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு"

# அரியலூர் மாவட்டத்தில் மாபெரும் பேச்சுப் போட்டி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், செப், 28 -

அரியலூர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்லூரியில் அரியலூர், செயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பங்குபெறும் மாபெரும் பேச்சுப் போட்டியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து மாணவ, மாணவியர்களிடம் உரையாற்றினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது :

கல்வி என்பது உயர் சாதி மக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.

அதைத்தாண்டி மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வித் தேவையை கருதி கல்வி நிறுவனங்கள் பல உருவாவதற்கு காரணமாக இருந்தது முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திராவிட சிந்தனையே ஆகும்.

மாணவர்கள் தங்களின் பொறியியல் அறிவோடு அரசியல் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் இதுவே கிராமப்புற மாணவர்களையும் தமிழகத்தையும் இந்திய அளவில் தனிச்சிறப்பாக உயர்த்திக் காட்டும் இந்திய அளவில் பல கிராமங்களுக்கு இன்றும் மின்சாரம் சென்று சேராத நிலையில் உள்ளது ஆனால் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து உட்கிராமத்திற்கும் 100% சதவிகிதம் மின்சாரம் எல்லோருக்கும் கிடைக்க செய்தார்.

மேலும் கல்வியறிவிலும் இந்திய அளவில் தமிழகம் சிறப்பான இடத்தை நோக்கி முன்னேற கலைஞர் கொண்டுவந்த திட்டங்களே காரணம்.

சென்னையில் டைட்டல் பார்க்கை உருவாக்கி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்கள்

கணிப்பொறி கல்வியில் உலக அளவில் தமிழர்களும் தமிழ்நாடும் முதன்மையடைய காரணம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தான் என பேசினார்.

பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்கள் விபரம்

அரியலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் சுமார் 120 பேர் கலந்துகொண்டனர்.

1,திராவிட மாடலும், திறன்மிக்க கல்வியும் என தலைப்பில் கீழப்பழூர் அரசு பாலிடெக்கினிக் கல்லூரி மாணவி தமிழ் பொன்னி முதல் பரிசு ரூ.10,000 வென்றார்,

2, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்லூரி பாலிடெக்னிக் மாணவி சிலம்பொலி கலைஞரும்,தமிழும் என பேசி இரண்டாவது பரிசு ரூ.5,000 வென்றார்.

3, விளாங்குடி அண்ணா பொறியியல் கல்லூரி மாணவி சுபலட்சுமி கலைஞரும், தமிழும் என பேசி மூன்றாவது பரிசு ரூ.3,000 வென்றார்.

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் 80 நபர்கள் போட்டியில் கலந்து கொண்டனர்.

1,ஜெயங்கொண்டம் மாடர்ன் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் எம். தீனா தொழில்துறையில் தமிழகத்தை உயர்த்திய தமிழினத் தலைவர் கலைஞர் எனும் தலைப்பில் பேசி முதல் பரிசு ரூ.10,000 வென்றார்.

2,ஜெயங்கொண்டம் மாடர்ன் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் எம். ஜனா தொழில்நுட்பக் கல்விக்கு பெரிதும் தோள்கொடுத்தவர் கலைஞர் எனும் தலைப்பில் பேசி இரண்டாம் பரிசு ரூ.5,000 வென்றார்.

3,ஆண்டிமடம் அரசு ஐ.டி.ஐ. சார்ந்த சிவசஞ்சை என்ற மாணவர் தெற்குசூரியன் எனும் தலைப்பில் பேசி மூன்றாம் பரிசு ரூ.3,000 வென்றார் .

இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ்குமார், கல்லூரி தாளாளர் எம்.ஆர்.ரகுநாதன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், வா.சௌந்தரராஜன், இரா.மணிமாறன், ரெங்க.முருகன், ஆர். கலியபெருமாள், வி.எழில்மாறன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜகான்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட பொறியாளர் அணி துணை தலைவர் சிவ.பாஸ்கர், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் த.இளம்பரிதி, பி.அருண்சிவம் , பால.பிரவின் ராஜ், எம்.செந்தமிழ்செல்வன் , எஸ்.கே.ஆர். விக்னேஷ், போட்டியின் நடுவர்களாக மாவட்ட இலக்கிய அணி தலைவர் கணேசன் ஆசிரியர் (ஓய்வு) மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி, பெ.தமிழ்செல்வன், மரகதம்,ப.பூங்கோதை, ப.ராமசந்திரன், சா. சிற்றரசு, சி.அரங்கநாதன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் அரியலூர் ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த மாணவ, மாணவியர் 203 பேர் கலந்துகொண்டனர்.

## தி.மு.க. விவசாய அணி

# திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் - அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்டந்தோறும் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா" வினை தி.மு.க. விவசாய அணி கொண்டாடவிருப்பதையொட்டி, அது குறித்து கலந்தாலோசிக்க,

திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட தி.மு.க. விவசாய அணி மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்" என்.கே.கே.பெரியசாமி, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர் - ம.முத்துராமலிங்கம், தி.மு.க. விவசாய அணி துணைச் செயலாளர் கே.வி.செல்லப்பா மற்றும் மாநில விவசாய அணி நிர்வாகிகள் ஆகியோர் தலைமையில், திருநெல்வேலி கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர். ரெ.மகேஷ், ஆகியோர் முன்னிலையில், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்,** விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் **தங்கம் தென்னரசு,** தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் **திருமதி.கீதாஜீவன்,** தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் **அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்,** கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் **மனோதங்கராஜ்** ஆகியோர் சிறப்புரையாற்றிட, வருகிற 29.09.2023 (வெள்ளிக் கிழமை) காலை 11.30 மணியளவில், குற்றாலம், ஐந்தருவி சாலை, சேனைத் தலைவர் மாளிகை திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணியின் மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.9.2023

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

# சட்டமன்றப் பேரவை பொதுக்கணக்கு ஆய்வு கூட்டம்!

## திருவாரூரில் பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு !

திருவாரூர், செப். 28 -

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழு 2023 - 2024 ஆய்வுக்கூட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை, சட்டமன்ற பேரவை பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் அக்ரி.எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஈ.ஆர்.ஈஸ்வரன், துரை.சந்திரசேகரன், எஸ். சேகர், எஸ்.எஸ்.பாலாஜி, தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை சார்புச்செயலாளர் ஜெ.பால சீனிவாசன், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர்பூண்டி. கே. கலைவாணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி . பி . சுரேஷ்குமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் தெரிவித்ததாவது,

பொதுக்கணக்குக் குழு என்பது ஆங்கிலேயர் நம்மை ஆண்டுக்கொண்டிருக்கும் பொழுது 1921ஆம் ஆண்டு இந்தியாவிலும் நடைமுறைப்படுத்தியது. கடந்த 2021ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தி நூறாண்டு நிறைவடைந்துள்ளது. நூறாண்டு நிறைவடைந்ததனையொட்டி நடைபெற்றக்கூட்டத்தில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் உரையாற்றும் போது நாட்டின் நிதிநிலையினை கண்காணிக்கப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவே பொதுக் கணக்கு குழு என்றார். வரவு, செலவு கணக்குகளை ஒவ்வொரு வருடமும் எந்த எந்த துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்ற நிதிநிலை அறிக்கையின் பேரில் எல்லாதுறையிலும் மக்களின் வரிப்பணத்தினை எவ்வாறு செலவு செய்கிறார்கள் என்பதனை ஆய்வு செய்து தணிக்கை செய்வதற்கு தணிக்கைக்குழு என்று இந்தியா முழுவதும் செயல்படுகிறது. தணிக்கைக்குழு ஒரு வருடத்திற்கு ஒவ்வொரு துறையிலும் 35 சதவீதம் ஆய்வு செய்கிறார்கள். ஆய்வு செய்யும் போது கிடைக்கின்ற அறிக்கையினை சட்டமன்றத்தில் அளிக்கின்றார்கள். இவ்அறிக்கையினை அடிப்படையாக கொண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழு ஆய்வு மேற்கொள்கிறது.

மேலும், 26.09.2023 அன்று திருவாரூர் மாவட்டத்தில் காலை முதல் மதியம் வரை பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டோம். தற்பொழுது திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்துதுறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இவ்ஆய்வுக்கூட்டத்தில் தணிக்கையின் அடிப்படையிலும், பத்திகளின் அடிப்படையிலும் ஆய்வு நடைபெற்றது. மத்திய மற்றும் மாநில நிதியின் மூலம் வீடுகள் கட்டபட்டுவருகிறது. ஒன்றிய அரசு அளிக்கும் வீடு கட்டும் திட்டத்திற்கு நிதி குறைவாக வழங்குவதால் மாநில அரசு கூடுதலாக நிதி அளித்து வருகிறது. ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கு போதிய அளவிலான நிதி வழங்க வேண்டும். கடந்த ஆட்சியில் பள்ளிகளின் தரம் உயர்த்துதல், விதைப்பண்ணைகள் அமைத்தல், வேளாண்மை கூட்டுறவு முறைகள் மற்றும் உயர்கல்வித்துறை போன்றவைகளின் தேவையினை சரியாக பூர்த்தி செய்யவில்லை. மேலும் மருத்துவமனைகளில் ஆய்வு மேற்கொண்ட பொழுது மருந்து ஆளுநர்கள் பதிவேட்டில் சரியாக பதிவு செய்ய அறிவுறுத்தியுள்ளோம். மேலும் பள்ளிகளின் கழிவறை மற்றும் சுற்றுப்புறுத்தினை தூய்மையாக வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தெரிவித்தார்.

முன்னதாக, கொரடாச்சேரி ஒன்றியம், அம்மையப்பன் கிராமத்தில் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுவரும் வீடுகளையும், குளிக்கரை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வேளுக்குடி அரசு உயர்நிலைப்பள்ளியினையும், திருவாரூர் வேளாண்மை விரிவாக்க மையத்தினையும், திருவாரூர் அரசினர் ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிகளையும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழு ஆய்வு மேற்கொண்டது.

இந்நிகழ்வில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தொழிலாளர் அணி

# கோவை மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 'தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா"வினை மாவட்டந்தோறும் சிறப்பாக கொண்டாடுவது' என தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, கோவை மண்டலத்திற்குட்பட்ட கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் நிகழ்ச்சிகள் கீழே குறிப்பிட்டுள்ள கால அட்டவணைப்படி, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் வழிகாட்டுதலின்படி நடைபெறும்.

| மாவட்டம் | | தேதி |
|---|---|---|
| கோவை | - | 10-10-2023 |
| நீலகிரி | - | 11-10-2023 |
| திருப்பூர் | - | 12-10-2023 |
| ஈரோடு | - | 13-10-2023 |

இக்கூட்டங்கள் நடத்துவது தொடர்பாக மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் நா.தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில் 2.10.2023 (திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில், கோவை கிராஸ்கட் ரோட்டில் அமைந்துள்ள கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில், கோவை மண்டலத்திற்குட்பட்ட கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 26 - 9 -2023

**பி.டி.சி. ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் மேல்மலையனூரில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடத்தினை முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததையடுத்து புதிய வகுப்பறையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கைக்குறிச்சி, ஸ்ரீ பாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 25.09.2023 அன்று துவக்கி வைத்து, கல்வி கடன் பெறுவதற்கான ஆணைகளை மாணவர்களுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.